# ஆழ்வார்கள் பாசுரங்களில் இயற்கை சார்ந்த உவமைகள்

*க. புவனேஸ்வரி*
முதலாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783285

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலத்தில் இயற்கையை வழிபட்டனர். இயற்கையை முதல் பொருளாக பாடலில் வைத்து பாடவில்லை என்றாலும் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். அதைத் தொடர்ந்து சங்கம் மருவிய காலத்தில் நீதி கருத்தை முதன்மைப்படுத்தி பாடினர். அதன் தொடர்ச்சியாக பல சமயங்கள் தோன்றின. அக்காலத்தில் இந்து மத வளர வேண்டும் என்ற நோக்கத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாசுரங்களை பாடினர். பல நூற்றாண்டு கால மாற்றம் ஏற்பட்டாலும் ஆழ்வார்கள் தங்களது பக்தியில் இயற்கைக்கும் இடம் கொடுத்துள்ளனர். இறைவனின் செயல்களையும் அவனை வழிபடும் முறைகளிலும் இயற்கையை நினைத்துள்ளனர். ஒரு பொருளைக் குறிக்க அதைவிட சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டு கூறுவதே உவமை ஆகும். இதில் நாம் ஆழ்வார்கள் பாசுரங்களில் இயற்கை சார்ந்த உவமைகள் மூலம் ஐம்பூதங்கள் பற்றியும் முழுமையாக ஆராய்வதாக அமைகிறது.*

***கலைச் சொற்கள்:*** *ஆழ்வாகர்கள், இயற்கை, உவைமை.*

**முன்னுரை**

*ஆழ்வார்கள் தம் ஈரச் சொற்களால் வடித்தெடுத்த பாசுரங்களில் இறைத்தன்மையை விளக்குவதுடன் தம் கவிதைகளில் அழகு மேலும் மேலும் மிளிர, தம் இலக்கண முறைப்படி பாக்களை அமைத்து அதில் இயற்கை காட்சி களையும் வானளாவிய தம் கற்பனை திறத்துடன் இணைத்து பாடியுள்ளார். இயற்கை படைப்புகளையும் அவற்றின் பெருமைகளை பேசிப் பேசி மகிழ்ந்துள்ளனர். அவை இயற்கை உவமையில் அமைகிறது இதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**உவமையில் இயற்கை**

*மனிதனால் படைக்கப்படாமல் தானாக தோன்றிய பொருட்களை இயற்கை என்பர். உலக இயக்கத்திற்கு மூலகாரணமாக இருப்பவை சூரியன், சந்திரன், ஐம்பூதங்கள் என்று சொன்னால் மிகை ஆகாது. ஆழ்வார்களின் பாசுரங்களில் இவ்வியற்கைப் பொருள்கள் திருமாலுடன் இணைத்துக் கூறப்பட்டு மேலும் சிறப்படைகின்றன.*

**சூரியன்**

*ஆதவன், ஆதித்தன், ஞாயிறு, கதிரவன், கதிர், சுடர், தினகரன், தினமணி, வெய்யோன், கதிரோன், பரிதி, அருக்கன் எனப் பல பெயர்களால் அழைக்கப்படும் சூரியனை முழுமுதற் கடவுளாக சூரிய பகவான் என வணங்கும் நடைமுறை இன்னும் நம் நாட்டில் உள்ளது. சூரிய ஒளி இன்றி உயிரினத் தோற்றமும் வாழ்வும் இல்லை என்பதை அறிவியலும் ஏற்றுக் கொள்கிறது.*

***'கழல் மன்னர் சூழக் கதிர் போல் விளங்கி***
***எழலுற்று மீண்டே இருந்து உன்னை நோக்கும்'***

*-(பெ.தி. 1;8-5)*

*துரியோதனன் சபையில், வீரக்கழல் அணிந்த அரசர்கள் பலர் வீற்றிருந்தனர். அவர்கள் நடுவில் சூரியன் போல் துரியோதனன் விளங்கினான். மிக உயர்ந்த இடத்தில் சூரியன் செருக்குடன் நிகழ்வது போல், தன்னை நெருங்க யாராலும் இயலாது என துரியோதனன் செருக்குடன் வீற்றிருந்தான் என்பதை கூற துரியனுக்கு சூரியன் உவமையாக*

அமைந்துள்ளது. சூரியன் வெப்பம் மிகுந்தவன். அது போன்று சூரியனும் பொறாமை, ஆணவம் போன்ற குணங்கள் மிகுந்தனவாக உள்ளன என்ற கருத்து இவ்வரியில் கூறப்பட்டுள்ளது.

பரந்து விரிந்த தன் ஒளிக்கிரணங்களால் உலகுக்கு உயிரளித்துக் காத்து வருகின்ற ஒன்றை சக்கர தேரில் வருகின்ற வலிமை உடையவன் சூரியன் என்னும் பொருளில்,

***விரிகதிர் பரப்பி உலகம்முழுது ஆண்ட***
***ஒருதனித் திகிரி உரவோன்***[1]

என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் கூறுவதால், சூரியனின் வலிமையை உணரலாம்.

## சந்திரன்

நிலவு, மதி, திங்கள், அம்புலி, திசிலன், தண்ணவன் என்று பல பெயர்களில் சந்திரன் இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளான். சங்க இலக்கியங்களில் நிலவு உவமையாக பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. களவு ஒழுக்கத்தின் போது தலைவியை காணுவதற்கு வாய்ப்பு கிடைப்பது மகிழத்தக்கது. மூன்றாம் பிறைத்திங்கள் போல் காட்சியருமை உடையவளாம் தலைவி. இதனைத் தெரிவிக்க ஓர் உவமையைத் தோழி கூறுகிறாள் இதனை,

***'தொழுது காண் பிறையின் தோன்றியாம் நுமக்கு அறிய மாகிய காலை'***

***- (குறுந்தொகை.290)***

என்ற அடிகள் விளக்குகின்றன.

ஆழ்வார் பாசுரங்களில் நிலவு பற்றிய உவமைகள் பல வந்துள்ளன. மேலும் இதில் உவம உருபு எதுவும் கையாளப்படவில்லை.

***'செக்கரிடை நுனிக்கொம்பில் தோன்றும் சிறுபறைப்போல்'***

*- (பெ.தி.1;8-2)*

கண்ணனின் முகத்திற்கு, சிறு பற்களுக்கும் நிலவை உவமையாக கூறிய பெரியாழ்வார், கண்ணனோடு தொடர்புடைய சுட்டிக்கும் நெற்றியில் தொங்கும் ஆபரணம் உவமையாக நிலவை கூறுகிறார்.

திருவள்ளுவரும், நட்பு அதிகாரத்தில் அறிவுடையார் நட்பு பிறைமதி போல் வளரும் தன்மைத்து என்பதையும், அறிவிலார் நட்பு தேய்பிறையாய் தேய்ந்து போகும் தன்மை என்பதையும்,

***நிறைநேர நீர்வர் கேண்மை பிறைமதிப்***
***பின்தீர பேதையார் நட்பு***[2]

எனும் குறளில் கூறுகிறார்.

## இருள்

சூரியன், சந்திரன் இரண்டும் ஒளி தருவன. இருள் ஒளியின்றி இருக்கும். இஃது அச்சம் தரும். இயற்கையாகவே ஒளியில் இருள் விலகும். சூரியன், சந்திரன் இவற்றின் உயர்வும், பெருமையும், தேவையும் இருளில் தான் உணர முடிகிறது. இருள் விலகும் போது ஏற்படும் மகிழ்விற்கு ஈடு இல்லை எனலாம். ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் இருளையும் உவமித்து காட்டியுள்ளது அவர்தம் கற்பனை வளத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

***'பேச்சிபா ஒண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து***
***ஆய்ச்சி முலை கொடுத்தான் அஞ்சாதே வாய்ந்த***
***இருளார் திருமேனி இன்பவளச் செவ்வாய்***
***தெருளா மொழியானைச் சேர்ந்து'***

***- (மூன்றாம் திருவந்தாதி 24)***

என்பதில் கற்பனைக்கு மேலும் வலிமை சேர்க்க ஆழ்வார்கள் கரடி, பன்றி இவற்றின் மேலான எம்பெருமானின் திருமேனிக்கே இருளை உவமையாக கூறினார். பேயாழ்வார் தம் திருவந்தாதியில் கண்ணன் பூதனையின் முலைப்பாலை அழுது செய்து அவள் இறக்கும் படிச் செய்தான். அப்படியிருக்கு மிகுந்தும், யாதே அஞ்சாமல் அவனுக்கு முலைப்பால் கொடுத்தமைக்கு காரணம் இருள் போன்ற திருமேனி கொண்டு பவளம் போன்ற சிவந்த அதரத்தை உடைய மழலையாகிய கண்ணனின் வடிவழகிலே மயங்கியதால் என்று இவ்வழியில் கூறப்பட்டுள்ளது.

## ஐம்பூதங்கள்

சங்க இலக்கியமாகிய எட்டுத்தொகையில் புறம்பாடும் நூல்களில் ஒன்றான புறநானூற்றில்,

***மண் திணிந்த நிலனும்***
***நிலம் ஏந்திய விசும்பும்,***

***விசும்பு தைவரு வளியும்,***
***வளித் தலைஇய தீயும்,***
***தீமுரணிய நீரும் என்றாங்கு***
***ஐம்பெறும் பூதத்து இயற்கை***[3]

*என்று ஐம்பெரும் பூதங்களாகிய நீர், வானம், மண், நெருப்பு, காற்று ஆகியவற்றை கூறுகிறது.*

***'நீர் வானம் மண் எரிகா லாய்நின்ற நேமியான்'***
***- (திருவாய்மொழி 10:4-1)***

*என்னும் நம்மாழ்வார் வாக்கால் அறியலாம்.*

***'வஞ்ச மனத்தான் படிச்சொழுக்கம் பூதங்கள்***
***ஐந்தும் அகத்தே நகும்***[4]

*என்கிறார் வள்ளுவர்.*

*அதாவது இந்த உலகத்தின் எல்லா படைப்புகளும் ஐம்பூதங்களை அடிப்படையாகக் கொண்டது. இதனை அறியாது மனிதன் வஞ்ச மனம் கொண்டு இயற்கைக்கு புறம்பான முறையில் வாழுகையில் ஐம்பூதங்களும் சிரித்துக் கொள்ளும்.*

**ஆகாயம்**

*ஆகாயம் என்பது முடிவில்லா பேரன்பு, வெட்டவெளி என்றும் அழைப்பர். இதில் ஏழு வண்ணம் கொண்ட வானவில் புவிக்கு அழுகாய் காட்சியளிக்கும். நாம் வணங்கும் தெய்வங்கள் வாழும் இடம் என்று நம்பப்படுகின்றது. வானம் நினைத்தால் மழை, மனிதன் நினைத்தால் வினை போன்ற பழமொழிகள் கிராமங்களில் காணப்படுகின்றன. வானத்தில் வெண்மையான கொடியாடையை விரித்துப் போன்று கங்கையாறு விழுகின்ற போது நீர் சரிவுடன் இருக்கும் என்பதை திருமங்கையாழ்வார்,*

***'விசும்பின் வெண்துகிற் கொடியென விரிந்து***
***வலநத்ரு மணிநீர்க் கங்கையின்'***
***- (பெ.தி.1:4-3)***

*என்னும் பாசுர அடிகளில் கூறுகிறார்.*

**காற்று**

*காற்றின்றி இவ்வுலகம் இயங்காது. மனித உயிர் வாழ்க்கைக்கு மிக மிக அவசியமானது. காற்றினை வளி, உயிர் வளி என்றும் அழைப்பர். காற்றானது தன்னடக்கத்திற்கு உதாரணமாகும். காற்று நமக்கு எவ்வளவு முக்கியம் என்பதை மூச்சு விடும் ஒவ்வொரு கணமும் உணர்த்துகின்றது. எம்பெருமான் ஐம்பூதங்களாகவும் விளங்குகின்றான் என்பதை வானமாகவும், நெருப்பாகவும், கடலாகவும், காற்றாகவும் இருக்கின்ற திருமால் தேன் போன்றும் பால் போன்று இனிக்கின்றான் என்ற பொருளில் பொய்கையாழ்வார்,*

***'வானாகி தீயாய் மாரிகடலாய் மாருதமாய்***
***தேனாகிப் பாலாம் திருமாலே'***
***- (முதல்திருவந்தாதி.92)***

*என்று கூறுகிறார்.*

**நெருப்பு**

*உலகிலுள்ள எந்த பொருட்களையும் எரித்து சாம்பலாக்கும் அல்லது தன்னுடையதாகக்கிக் கொள்ளும் சக்தி நெருப்புக்குண்டு. இதனை அக்னி, தேயு எனவும் அழைப்பர். எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் மேல் நோக்கிய செல்லும் தன்மையை கொண்டது. இந்து மத வழக்கப்படி அக்னி சாட்சியாக திருமணம் செய்யப்படுகின்றது.*

*திருமங்கையாழ்வார், திருப்பரிதி என்னும் திருத்தலம் குறித்து செய்துள்ள பாசுரம் ஒன்றில், இமயமலையில் அசோக மலர்கள் மலர்ந்தது நெருப்பு போன்ற அழகிய தோற்றத்தைக் கண்ட இழந்தது அதனை வண்டுகள் நெருப்பு என அஞ்சியிருக்கும் என எண்ணும் பொருளில்,*

***'தாது மல்கிய பிண்டிவின் டலர்கின்ற தழல்புரை எழில் நோக்கி***
***பேதை வண்கேள் எரியென வெருவரு பிருதி'***

*என்ற பாடலடியை மயக்க அணியாகக் கூறுகிறார்.*

**நீர்**

*நீரானது புனல், தண்ணீர், அமிர்தம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது நீராகும். எந்த சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் இயல்பாகவே தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மை உடையது. தண்ணீர் பாசத்துக்கும் பணிவிற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.*

***'நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்***
***வான்இன்று அமையாது ஒழுக்கு'***

***- (குறள்.20)***

*என்று திருவள்ளுவர் கூறுவதற்கு ஏற்ப, தண்ணீர் இல்லாத உலக இல்லை. நீர் இன்றி அமையா யாக்கை என்றார். புலவர் குடபுலவியனார் அந்நீர் கடலிலிருந்து கிடைக்கிறது. கடல் நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி மேகமாகத் திரண்டு மழையாக பெய்கிறது என்பது அறிவியல் உண்மை.. ஆக மழையாக பெய்கிறது என்பது அறிவியல் உண்மை ஆக மழைக்கும் காரணமான கடல் அதிலிருந்து கிடைக்கும் சங்கு, அதில் சங்கமம் ஆகும் ஆறு, வெள்ளநீர் முதலியவற்றை ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் உவமைகளில் இதை அறிய முடிகிறது.*

**நிலம்**

*ஐம்பூதங்களில் முதன்மையானதாக நிலம் விளங்குகின்றது. நிலத்தை பூமி, மண் என்றெல்லாம் அழைப்பர். நிலம் பொறுமைக்கு உதாரணமாக இருக்கின்றன. மண்மகள், நிலமகள், பூமகள் என்ற சொற்கள் நிலத்தை உவமையாக்கி சம்பந்தப்படுத்தி பெண்களின் பெருமை கூறப்படுகின்றது.*

*திருமங்கையாழ்வார் மை போன்ற கருமை நிறம் கொண்ட கடலும், பூமியும் சிறந்த மலைகளும், அழகுமிக்க சூரிய சந்திரர்களும் ஆகிய பொருளில் விரிந்து நிற்கும் எம்பெருமானை உள்ளபடி தெரிந்து கொண்டதாக கூறுகிறார்.*

***'மையொன் கருங்கடலும் நிலனும் மணிவரையும்***
***செய்ய சுடரிரண்டும் இவையாய நின்னை நெஞ்சில்***
***உய்யும் வகை உணர்ந் தேன்உன் மையால்'***

***(பெ.தி.6-3-6)***

*என்பன பாசர அடிகள்.*

**முடிவுரை**

*உவமையில் இயற்கை, சூரியன், சந்திரன், இருள் போன்றவற்றையும் ஐம்பூதங்களாகிய நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவை கொண்டு ஆழ்வார்கள் கூறியுள்ள இயற்கை சார்ந்த உவமைகளில் அமைகிறது என்பதை அறிய முடிகிறது.*

**சான்றெண் விளக்கம்**

1. *நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம், ப.எ.12.*
2. *க.ப.அறவாணன், திருக்குறள், கு.782, ப.எ.287.*
3. *ச.வே.சுப்பிரமணியன், புறநானூறு, சங்க இலக்கியம் தொகுதி -3, ப.எ.504.*
4. *க.ப.அறவாணன், திருக்குறள், கு. 271.*

**துணை நூற்பட்டியல்**

1. *அறவாணன்.க.ப - திருக்குறள் மூலமும் உரையும் தமிழ்க்கோட்டம், 2, முனிரத்தினம் தெரு, அய்யாவு குடியிருப்பு, அமைந்தகரை, சென்னை - 600 029.*
2. *சுப்பிரமணியன் - புறநானூறு மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை சென்னை - 600 108.*
3. *வேங்கடசாமி நாட்டார் - சிலப்பதிகாரம் அமிழ்தம் பதிப்பகம், பி.11, குல்மோகர் குடியிருப்பு, 35, தெற்கு போக்கு சாலை, தியாகாராயர் நகர், சென்னை - 600 017.*